# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● நவம்பர் 3, 2018

Weekly E-paper ● November 3, 2018




# நல்ல தொடக்கம்

– சுப.வீரபாண்டியன்

உள்ளே...



‘ஆண்மை’ அழிய வேண்டும்

– மா.உதயகுமார்



377

– கனகா



நிர்வாகத் திறனற்ற மோடி!

– தலையங்கம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● நவம்பர் 3, 2018

Weekly E-paper ● November 3, 2018



## தமிழர்களை அழிக்கும் ஆயுத எழுத்து

இலங்கை அதிபர் மைத்ரிபால சிறிசேனா, இன்றைய பிரதமர் ராஜபக்சே, நேற்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கே ஆகிய மூவரில் தமிழர்களுக்கு நன்மை செய்தவர்கள் யாருமில்லை. வேண்டுமானால் கூடுதல் கேடு செய்தவர்கள் யார் என்று சொல்லலாம். அதில் ராஜபக்சேவுக்கு முதலிடம்.

2009இல் தமிழினத்தையே அழித்துவிடும் நோக்கில் ராஜபக்சே இனப்படுகொலையில் ஈடுபட்டிருந்தபோது, சிறிசேனாதான் ராணுவ அமைச்சர். இருவருக்கும் முன்னோடியாக, உலகம் முழுவதும் சென்று, விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு என்னும் கருத்தை விதைத்தவர் ரணில். எனவே தமிழின அழிப்பில் இவர்கள் மூவருக்கும் பங்கு உண்டு.

நல்லவர் போல் நடித்து, நாடெங்கும் சென்று, தமிழர்களுக்கு கேடு விளைவித்தார் ரணில் என்பதால்தான், 2005 இலங்கைத் தேர்தலில், ரணிலுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று புலிகள் மக்களைக் கேட்டுக்கொண்டனர். அதுவே ராஜபக்சே வெற்றிக்கும், நம் இன அழிவுக்கும் வழிவகுத்து விட்டது.

இப்போது மீண்டும் ராஜபக்சே, சட்டத்திற்குப் புறம்பாகப் பிரதமர் ஆக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்றமும் நவம்பர் 5 வரையில் முடக்கப்பட்டுள்ளது. முதலில் 16 ஆம் தேதி வரை என்றனர். கடும் எதிர்ப்புகள் கண்டு, அதனை 5 ஆம் தேதி என்று மாற்றி உள்ளனர்.

ஏற்கனவே இலங்கையின் பொருளாதாரம் மிகச் சரிந்து கிடக்கிறது. அவர்களின் ஆண்டு வருமானமான 14.5 மில்லியன் டாலர் ரூபாயில், 12 மில்லியன் டாலருக்கும் மேலாகக் கடன் கட்டிக் கொண்டுள்ளனர். கடனில் பெரும்பகுதி சீனாவுக்குச் செல்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சீரழிந்துகொண்டிருக்கும் சிறீலங்கா, சீனாவின் இன்னொரு மாநிலம் ஆகிவிடும் போல் தெரிகிறது. கெடுவான் கேடு நினைப்பான் என்பது நம்மூர்ச் சொல்லாடல். தமிழினத்தை அழிக்க வேண்டும் கருதிய சிங்கள இன வெறியர்கள் இன்று தங்களையே அழித்துக் கொண்டுள்ளனர்.

காலம் நின்று கொல்லும்!

●

**சுப.வீரபாண்டியன்**

## நல்ல தொடக்கம் நம்பிக்கை விளக்கம்



மதவாதம், விலைவாசி உயர்வு, ஆணவப் போக்கு, வெளிநாட்டுப் பயணம் இவையே மோடி ஆட்சியின் கடந்த நான்கரை ஆண்டுச் சாதனை என்று சுருக்கமாகச் சொல்லிவிடலாம். இவை அனைத்துக்கும் முடிவு கட்ட வேண்டும் என்று மக்கள் குமுறிக் கொண்டிருக்கும் வேளையில், அந்தக் கனவை நினைவாக்க எதிர்க்கட்சிகள் ஒன்றுகூடத் தொடங்கியுள்ள காட்சிகள் ஊக்கம் தருகின்றன.

அந்த நல்ல பணியை ஆந்திர முதல்வர் சந்திரபாபு தொடங்கியுள்ளார். நேற்று (01.11.2018) தில்லி சென்று, காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தியைச் சந்தித்ததோடு, சரத் பவார், பரூக் அப்துல்லா ஆகிய தலைவர்களையும் சந்தித்துப் பேசியுள்ளார். விரைவில் திமுக தலைவர் ஸ்டாலின் அவர்களையும் சந்திக்க இருப்பதாகக் கூறியுள்ளார்.

ஜனநாயகத்தைக் காக்கவும், இந்திய அமைப்புகளைக் காக்கவும் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுகூடிப் பணியாற்ற முடிவெடுத்துள்ளோம் என்று ராகுல் காந்தி ஊடகவியலாளர்களிடம் கூறியுள்ளார்.

1933 ஆம் ஆண்டு ஹிட்லருக்கு வாக்களித்த ஜெர்மானிய மக்கள், அதன் பிறகு, சில தலைமுறைகளுக்குத் தேர்தலைச் சந்திக்கவே முடியவில்லை. அழிவுகளை மட்டுமே சந்தித்தனர். மீண்டும் மோடி ஆட்சிக்கு வந்தால், நம்.நாட்டின் நிலைமையும் அவ்வாறே ஆகிவிடும் என்னும் உண்மையை உணர்ந்து, ஒன்றுகூடியுள்ள எதிர்க்கட்சிகள் நம்பிக்கை தருகின்றன.

இது நல்ல தொடக்கமாகவும், கலங்கரை விளக்கம் போல் ஒரு நம்பிக்கை விளக்கமாகவும் உள்ளது.

●

# ‘ஆண்மை’ அழிய வேண்டும்



மா.உதயகுமார்

பாலியல் ரீதியான குற்றங்கள் அன்றாடம் அரங்கேறுவதைப் பார்க்கிறோம். அப்படி மீண்டும் மிகக் கொடூரமான தாக்குதலுக்குத் தமிழாட்டில் இரு பெண் குழந்தைகள் உள்ளாகியிருப்பதை எண்ணிப் பார்க்கும் போது கண்களில் கண்ணீர் கொட்டுகிறது. பெண் விடுதலையில் முன்னோடியாக இருக்கும் தமிழ்நாட்டில் இந்நிலை தொடர்வது நாம் மேற்கொள்ள வேண்டிய பரப்புரையை, விழிப்புணர்வை இன்னும் பன்மடங்கு வீரியமாகக் கொண்டு செல்ல வேண்டியதை உணர்த்துகிறது.

சேலம் ஆத்தூர் அருகே இராஜலட்சுமி என்கிற 13 வயதுக் குழந்தைக்கு தினேஷ் என்கிற நபர், பாலியல் தொல்லைகள் கொடுத்ததோடு, இணங்க மறுத்த அந்தக் குழந்தையை வெட்டிக் கொன்றிருப்பது காட்டுமிராண்டி வாழ்க்கையையே நம் கண்முன் கொண்டு வருகிறது. குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் என்பது அதிகரித்து வருவது மனிதநேயம் என்பதாக ஒன்றிருக்கிறதா என்கிற கேள்வியை எழுப்புகிறது.

அதே போல் திருச்சி அருகே ஒரு பெண் குழந்தையைக் கட்டி வைத்து, நிர்வாணப்படுத்தி நான்கு அய்ந்து பேர் சேர்ந்து தொடர்ந்து ஆறு மாத காலமாகப் பாலியல் வன் கொடுமைக்கு உள்ளாக்கியிருப்பதும் நாம் வாழும் சமூகம் நாகரிகமான சமூகமாக மாற இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் தேவைப்படுமோ என்றே மலைக்க வைக்கிறது.

ஒரு பெண்ணின் உடல் போகப் பொருளாகவும், யார் வேண்டுமானாலும் அதற்கு உரிமை கொண்டாடலாம் என்கிற மனப்போக்கிற்கு உரியதாகவும், மதம் என்ற பெயரில் மக்களைச் சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கிறது பார்ப்பனியம்.

பெண்களையும், பெண்குழந்தைகளையும் பாதுகாப்பாக இருக்க வற்புறுத்துவதைவிட, ஆண் குழந்தைகள் வளர்க்கப்பட வேண்டிய வழிமுறைகளையே நாம் பெற்றோர்களுக்கும், சமூகத்திற்கும் பரப்புரை செய்ய வேண்டியிருக்கிறது. “அடிடா அவள, வெட்றா அவள” என்கிற பாடல் வரிகளை இரசிக்கும் சமூகத்தில் வளரும் ஆண் குழந்தைகள் ஆபத்தானவர்களாக உருவாக்கப்படுகிறார்கள். “பெண்கள் விடுதலைக்கு ‘ஆண்மை’ அழிய வேண்டும்” என்றார் தந்தை பெரியார்.

இனி ஒரு இராஜலட்சுமியின் நிலை இங்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்றே மனம் பதறுகிறது. சமூகத்தின் அனைத்துத் துறையில் இருப்பவர்களும், குறிப்பாக மக்களோடு எப்போதும் தொடர்பில் இருக்கும் ஊடகம், கலைத்துறை போன்ற அமைப்புகளும், பாலியல் கொடுமைகள் மீதான உரையாடலை மக்களிடம் தெளிவான முறையில் எடுத்துச் செல்ல வேண்டும்.

அடைத்துவிடப்படக் கூடாது பெண்கள் வீட்டிற்குள், ஆண் ஆதிக்கத்தை உடைத்து விடுபட வேண்டும்.

•

## எதிர் வினை



மீ டூ (MeToo) குறித்து மற்றவர் கருத்துகளுக்கு மதிப்பு அளிக்கும் வகையில் அந்தப் பதிவை நீக்கிக் கொண்டார் பேராசிரியர் சுப.வீ. அதை அவரே தெரிவித்திருப்பது திராவிட இயக்கத்தின் கருத்துச் சுதந்திரம், மற்றவர் கருத்துக்கு மதிப்பளித்தல் ஆகியவற்றையே வெளிப்படுத்துகிறது. இது நாம் அனைவரும் பயின்று கொள்ள வேண்டிய பாடம். The Dravidian years பற்றிய தங்களின் விமர்சனம் அருமை. அதிகாரப் பரவல் மாற்றங்கள், நில உச்சவரம்பு நிர்ணயம் போன்ற அனைத்துத் திட்டங்களும் அடிமட்ட நிலையில் உள்ள மக்களின் நன்மைகளை முதன்மையாகக் கொண்டு தலைவர் கலைஞர் சிந்தித்து செயல்படுத்தியவையே என்ற உண்மையை உரக்கச் சொல்லியிருக்கிறார் நூல் ஆசிரியர் எஸ். நாராயண்.

**செ. சுரேஷ் குமார், கொமாரபாளையம், சேலம்.**



அரசு அலுவலகங்களில் கடவுள், மதம் சம்பந்தப் பட்ட படங்கள் இருக்கக் கூடாது என்பது இத்தனைக் காலம் எனக்குத் தெரியாமல் இருந்தது. இந்த இதழின் மூலம் அதற்கான ஒரு தெளிவு பிறந்தது. வருங்காலங்களில் அரசாங்கமும், அரசு அலுவலர்களும் இதனைப் பின்பற்றுமாறு நாம் முயற்சி எடுக்க வேண்டும் என நினைக்கிறேன்.

**கலைவாணன், கீழ்க்கட்டளை.**

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## நிர்வாகத் திறனற்ற மோடி!

இந்தியாவின் தலைமைப் புலனாய்வு அமைப்பான சி.பி.ஐ. மோடியின் ப.ஜ.க அரசினால் நிலை குலைந்து போய் விட்டது.

2014-ஆம் ஆண்டுக்குப் பின்னர் திட்டக் கமிஷன் கலைக்கப்பட்டு நிதிஆயோக் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அதுவும் பலவீனமாக இருக்கிறது.

மாநில அரசின் கீழ் இருந்த கல்வியை மத்திய அரசின் பட்டியலுக்குக் கொண்டு போய் அதுவும் சீர் குலைந்து கிடக்கிறது.

இப்படி நாட்டின் முக்கியமான துறைகளில் எல்லாம் சீர்கேடுகளை உருவாக்கிய பிரதமர் மோடி உலகம் சுற்றிக் கொண்டிருப்பதை வேலையாகக் கொண்டிருக்கிறார்.

எப்போதாவது இந்தியாவுக்கு வந்தால் ஏதாவது குளறுபடியைச் செய்து விட்டு மீண்டும் வெளிநாடு போவது அவர் வழக்கம்.

இப்பொழுது ரிசர்வ் வங்கிக்குள் நுழைந்திருக்கிறார். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ரிசர்வ் வங்கியின் ஆளுனராக இருந்த நேர்மையான அதிகாரி ரகுராம் ராஜன் அப்பொறுப்பிலிருந்து விலக நிர்பந்திக்கப் பட்டார்.

தமக்குச் சாதகமான குஜராத்தை சேர்ந்த உர்ஜித் பட்டேல் ஆளுனராக ஆக்கப்பட்டார்.

பொருளாதார மாற்றம், பெட்ரோல் டீசல் விலை உயர்வு, வாராக்கடன் போன்றவைகளால் தடுமாறிப் போனது மத்திய அரசு.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வங்கியின் வாராக்கடன் 2.45 லட்சம் கோடி. இப்பொழுது அது 10 லட்சத்தையும் தாண்டியுள்ளது. மல்லையா முதல் நீரவ் மோடி, மொகுல் சோக்ஷி வரை பல்லாயிரம் கோடிகளில் கடன் வாங்கியவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்று விட்டனர். ரிசர்வ் வங்கி நிலை குலைந்து போனது.

வாராக்கடன் உயர்வுக்கு ரிசர்வ் வங்கிதான் காரணம் என்கிறார் நிதியமைச்சர் அருண் ஜேட்லி. இல்லை மத்திய அரசே முடிவுகள் எடுகின்றன என்கிறார் ரிசர்வ் வங்கி ஆளுனர்.

மொத்தத்தில் முக்கியத் தன்னாட்சி பெற்ற அரசு நிறுவனங்கள் பா.ஜ.க. மோடி அரசினால் சீர்குலைந்து போய்க்கொண்டிருக்கின்றன.

இது நாட்டுக்கும் நல்லதில்லை. மோடிக்கும் நல்லதில்லை.

## பஹ்ரைன் முப்பெரும் விழா



கலைஞர் செம்மொழிப் பேரவையின் சார்பில் 26.10.2018 அன்று பஹ்ரைன், சுவிஸ் இண்டர்நேஷனல் ஹோட்டலில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தளபதியார் நூலகத்தைத் திறந்து வைத்துப் பேருரை ஆற்றினார் கவிஞர் கனிமொழி. திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப வீரபாண்டியன் வாழ்த்துரை வழங்கினார்.

## புதிய தோழர்களுடன் சந்திப்பு



திராவிட இயக்கத் தமிழர் பேரவையில் இணைந்துள்ள புதிய உறுப்பினர்களோடு, 28.10.18 அன்று சென்னையில் நடைபெற்ற கலந்துரையாடலில், பேரவையின் பொதுச் செயலாளர் மற்றும் மாநில, மாவட்டப் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். பேரவையின் கொள்கை விளக்கம், சட்ட விதிகள், அமைப்பு முறை ஆகியன விளக்கிச் சொல்லப்பட்டன.

## சாந்தா அம்மையார் நினைவஞ்சலி



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் அவைத் தலைவர் கயல் தினகரன் அவர்களின் துணைவியார் சாந்தா அம்மையார் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வும், படத்திறப்பும் 28.10.2018 மாலை சென்னையில் நடைபெற்றது. டி.கே.எஸ் இளங்கோவன், கலி.பூங்குன்றன், மு.மேத்தா, விஜயா தாயன்பன், சுப. வீரபாண்டியன் ஆகியோர் பங்கேற்றனர்.

# 377

## ● கனகா

வயது வந்த, இரு நபர்களுக்கிடையேயான, இசைவுடன் கூடிய தன்பாலின உறவு தண்டனைக்குரிய குற்றம் எனும் 377 சட்டப்பிரிவைத் திருத்தி உச்ச நீதிமன்றம் கடந்த செப் 6, அன்று வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒருமித்த தீர்ப்பை வழங்கியது.

ஒட்டு மொத்த ஆங்கில ஊடகமும் கொண்டாடி மகிழ்ந்த இத் தீர்ப்பை, தமிழ்நாடு ஏனோ சலனம் இன்றிக் கடந்து சென்றது. ஒரு சில ஊடகங்களும், கனிமொழி போன்ற வெகு சில தலைவர்களுமே இதை வரவேற்றுள்ளனர். பெரும்பாலான தலைவர்கள் எதிர்மறைக் கருத்துக்களையே பதிவு செய்திருக்கின்றனர்.

தலைமை நீதிபதி உட்பட ஐந்து பேர் கொண்ட அமர்வு தெரிவித்த கருத்துக்கள், இத்தீர்ப்பின் அவசியத்தையும் திராவிட அரசியலுக்கும் 377க்கு எதிரான போராட்டத்திற்கும் உள்ள ஒற்றுமையையும் உணர்த்தும் படியாக இருந்தது. பெரும்பான்மை கருத்துக்கள் அரசியல் சட்டமாக முடியாது என்று தலைமை நீதிபதி சொன்ன கருத்து பாலியல் சிறுபான்மையினரான (LGBT) மக்களை மட்டுமில்லாமல் இந்துத்துவா கொள்கையினால் ஒடுக்கப்படும் எல்லா சிறுபான்மையினருக்குமானதாக இருந்தது.



நீதிபதி நரிமன், நவீன உளவியல், மருத்துவம் மற்றும் சட்டம் தற்பால் ஈர்ப்புடையர்களையும், திருநங்கைகளையும் மனநோயாளிகள் இல்லை என்று அங்கீகரிக்கிறது என்றார். இது மத அடிப்படைவாதிகளின் தொடர் பொய்ப் பிரச்சாரத்திற்கு எதிரானதாகப் பார்க்கப்படுகிறது.

அமர்விலிருந்த ஒரே பெண் நீதியரசர் இந்து மல்ஹோத்ரா, வரலாறு இச்சமூக மக்களிடமும் அவர்கள் குடும்பத்தினரிடமும் மன்னிப்புக் கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றது என்றார். தற்பாலீர்ப்பு அயல்நாட்டு மோகம் என்று சொல்லும் அதி மேதாவிகளுக்கு இது அதிர்ச்சியளித்திருக்கும்.

இத்தீர்ப்பின் முத்தாய்ப்பாக ,நீதியரசர் சந்திரசூட் தெரிவித்த கருத்து கவனிக்கப்பட வேண்டியது. 377 குறிப்பிடும் "இயற்கைக்கு முரணான" என்ற பதம் இனவிருத்தியை நோக்காகக் கொள்ளாத உடலுறவை மட்டுமே குறிப்பதாகக் கருத முடியாது, மாறாக சமூகம் விரும்பாத எல்லா வகையான நெருக்கத்தையுமே அது குறிக்கிறது. சாதி, மதக் கலப்புகளும் இதில் அடங்கும். தன்பாலீர்ப்பு தம்பதிகளும் , மாற்றுச் சாதி, மதங்களில் இணையும் தம்பதிகளும் சந்திக்கும் புள்ளியானது காதலுக்காக அவர்கள் எதிர்கொள்ளும் அபாயங்களில் உள்ளது என்ற அவரது கருத்து பாலியல் சிறுபான்மையினரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

இங்கு புரிந்துகொள்ள வேண்டிய மற்றுமொரு முக்கிய அம்சம், குழந்தைகள் மற்றும் சிறார்களுக்கெதிரான பாலியல் குற்றங்களையோ, விலங்குகளுடனான பாலியல் சில்மிசங்களையோ இத்தீர்ப்பு அங்கீகரிக்கவில்லை. பதினெட்டு வயது நிரம்பிய இருவருக்கிடையே முழுசம்மதத்துடன் நடக்கும் உறவை மட்டுமே அங்கீகரிக்கிறது.

வரலாறு நெடுக அநீதி இழைக்கப்பெற்ற, இன்றளவும் சினிமாக்களிலும், தொலைக்காட்சி ஊடகங்களிலும் கேலிப்பொருளாகவே சித்தரிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் முதல் வெற்றி இத்தீர்ப்பு என்றால் அது மிகையாகாது. இந்த தீர்ப்பின் மூலம் பாலின சிறுபான்மையினருக்குக் கிடைத்திருக்கும் சட்டப் பாதுகாப்பு, அச்சமூகத்திற்குத் தேவையான அடுத்த கட்ட உரிமைகளுக்கு வழிவகுக்குமென்று நம்பப்படுகிறது. குடும்ப அமைப்பில் புறக்கணிக்கப்படுதல், கட்டாயத் திருமணம், வேலை வாய்ப்பில் இடம் ஒதுக்கப்படுதல் போன்ற பல பிரச்சனைகளைப் பேச இத்தீர்ப்பு தொடக்கப்புள்ளியாய் அமையும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது

முற்போக்கு அரசியல் களமான தமிழகத்தில் கலாச்சாரத்தைக் காரணம் காட்டி இத்தீர்ப்பைப் புறக்கணிப்பது பாலியல் சிறுபான்மையினர் மத்தியில் பெரும் ஏமாற்றமாகவே பார்க்கப்படுகிறது. பாலியல் சுதந்திரத்தையும், தன்பாலீர்ப்பு பற்றிய விவாதங்களையும் அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் கடமை பெரியாரிய , திராவிட இயக்கங்களுக்கு உண்டு என்பது தான் முற்போக்காளர்களின் கருத்தாக இருக்க முடியும். சட்டம் அங்கீகரித்த உரிமையை சமூகமும் அங்கீகரிக்கும் பொழுதுதான் அது முழுமை பெறும். பாலியல் சுதந்திரம் தனி மனித சுதந்திரத்தின் ஓர் அங்கம் என்றும், தனி மனித சுதந்திரம் தான் மானுட மாண்பு என்றும், பொது சமூகம் உணரும் பொழுதே நாம் பெரியார் சொன்ன சமத்துவ சமுதாயத்தை அடைய முடியும். சமத்துவ சமுதாயத்திற்கான பெரும் பயணத்தில், இத்தீர்ப்பு மற்றுமொரு வெற்றிப்படியே.

**(கட்டுரையாளர் பெரியாரியவாதி, திருநங்கையரின் 'ஓரினம்' அமைப்பின் உறுப்பினர்)** ●

---

# வினாவும் விடையும்

**மு.தினேஷ்குமார்:** அறிஞர் அண்ணாவை இழிவாகப் பேசிய, கோவால்கருக்கு விழா எடுத்த, பசும்பொன் முத்துராமலிங்கனார் ஜெயந்தியில் திமுக தலைவர் பங்கேற்றது ஏற்புடையதா? ஓட்டரசியலே பிரதானமா?

பெருங்களத்தூர்

*சுபவீ :* உண்மைதான். அறிஞர் அண்ணா குறித்து மட்டுமில்லை, தந்தை பெரியார் குறித்தும் அவர் இழிவாகப் பேசியுள்ளார். அது ஒரு காலகட்டம். திக – திமுக மோதல்கள் ஒரு கட்டத்தில் நடந்துள்ளன. காமராஜரை நாமும், நம்மைக் காமராஜரும் கடுமையாகத் தாக்கிக் கொண்ட நேரங்கள் உண்டு. அதனை இன்று அப்படியே பின்பற்ற முடியுமா?

அவ்வளவு ஏன், ராஜிவ் காந்தியைக் கடுமையாக எதிர்த்த என் போன்றவர்கள், இன்று அவருடைய மகன் ராகுல் காந்தி அடுத்துப் பிரதமராக வரட்டும் என்று விரும்புகிறோம். இன்றைய சூழலில் மோடியை அகற்றுவதே உடனடித் தேவையாக உள்ளது. ஒரு காலத்தில் நடந்ததையே தொடர்ந்து பற்றிக்கொண்டு இருக்க முடியாது.

முத்துராமலிங்கனார் இந்துமதப் பற்றாளர் என்பது உண்மைதான். அதனால், அவர் சமூகத்தைச் சேர்ந்த அனைவரும் இன்று பாஜக வின் ஆதரவாளர்கள் இல்லை. பெரியார், அண்ணாவை ஏற்றுக்கொள்கிற, திராவிட இயக்கச் சிந்தனை உடையவர்கள் அங்கு பலர் இருக்கின்றனர். அவர்களின் வாக்குகளை எல்லாம் நாம் ஏன் இழக்க வேண்டும்?.

.. வாக்கரசியல்தான் முதன்மையானதா என்று கேட்பது எளிது. ஆனால் வாக்கரசியலும், ஆட்சியும் இல்லாமல் என்ன செய்ய முடியும்? அதுவே பிரதானம் என்று சொல்லவில்லை. . ஆனால் அதுவும் தேவை என்பதை மறுக்க முடியாது..

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.